கொடுப்பது பற்றி முயற்சி செய்து பார்க்கலாம் என்று அற நிலையத்துறை அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த மூலிகைப் பண்ணையை அந்த இடத்தில் ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி, அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் நானும் எடுத்து வருகிறேன் என்ற இந்தச் செய்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நங்கை என்னும் வகைப்பட்ட துளசி நாட்டில் அழிந்துக் கொண்டே போகிறது. அந்த துளசியின் இலை பாம்புக் கடிக்குச் சிறந்த மருந்தாக இருக்கிறது. வயல் காட்டில் கிராமப் புறங்களில் வேலை செய்பவர்களை திடீரென்று பாம்பு கடித்து விட்டால், மருத்துவமனையும் வயற்காட்டிலிருந்து வெகு தொலைவில் இருக்குமானால், அவர்களை எடுத்துச் செல்வதற்குள் இறந்து விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சிறிய நங்கை என்னும் வகைப்பட்ட துளசியை கிராமப்புறங்களில் பயிர் செய்து தோட்டம் அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தமிழக அரசு மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது என்று கூறி, நல்ல வேளை யாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாம்புக் கடியிலிருந்து தப்பியதற்காக இயற்கைக்கு நன்றி கூறுகிறேன்.

திருவண்ணாமலை—திருப்பதி பல்லவன் பேருந்துப்பணி.

* வினா எண் 502—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் இருந்து வேலூர், சித்தூர் வழி யாக திருப்பதி சென்று வந்த பல்லவன் பேருந்து சமீப காலமாக நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

(இ) பேருந்தை மீண்டும் இயங்கச் செய்ய அரசு எடுத்து உள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) ஆந்திர மாநில நீதிமன்ற உத்தரவின் பேரில் இத் தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக் கம் நிறுத்தப்பட்டது.

(இ) ஆந்திர மாநில உயர் நீதிமன்ற மறு உத்திரவின்படி 14- 11- 1980 முதல் இத்தடத்தில் மீண்டும் இக்கழக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் திருவண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு சென்று வெங்கடாசலபதியை தரிசிக்க காலையிலிருந்து இரவு வரை வண்டிகள் போய் வந்துக் கொண்டிருந்தன. இடையில் நிறுத்தப்பட்டு திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திருவண்ணாமலையிலிருந்து எந்த வண்டியும் திருப்பதிக்குச் செல்லவில்லை. சேலத்திலிருந்துதான் திருவண்ணாமலை வழியாக திருப்பதிக்கு வண்டிகள் போகின்றன. அந்த வண்டிகளில் இந்தப் பகுதி மக்களுக்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே, இந்தப் பகுதி மக்கள் பயன்படுத்த திருவண்ணாமலையிலிருந்தே திருப்பதிக்கு வண்டியை விட அரசு முயற்சி செய்து நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்துதான் திருப்பதிக்கு பேருந்துகள் செல்வதாக என்னிடத்தில் தகவல் இருக்கிறது. அப்படித்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தின் உத்தரவை பெற சில காலம் ஓடாமல் இருந்தது. இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது. அப்படி அவர்கள் சொல்கிற மாதிரி திருவண்ணாமலையிலிருந்து செல்லவில்லை என்றால் மீண்டும் ஓட்டப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே தனியார்களின் பேருந்து வண்டிகள் தான் சென்று கொண்டிருந்தன. அரசு பேருந்துகள், தங்களுக்குத் தான் அந்த பெர்மிட் வேண்டும் என்று கோர்ட்டுக்குச் சென்று வழக்காடி பெர்மிட் பெற்றிருக்கிறது. ஆந்திர மாநில நீதிமன்றம் அப்படி உத்தரவை இட்டிருக்கிறது. ஆனால் பிறகும் கூட திருப்பதிக்கு நேரிடையாக திருவண்ணாமலையிலிருந்து பேருந்துகள் செல்லவில்லை. சேலத்திலிருந்து திருவண்ணாமலை வழியாகத்தான் திருப்பதிக்குச் செல்ல வண்டிகள் இருக்கின்றன. அவைகளில் இந்தப் பகுதி மக்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், அவைகளை மீண்டும் பழையபடியே ஓட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. திருவேங்கடம் அவர்கள் சொல்லியபடி தனியார்களிடம் இருந்த வழித்தட .உரிமையை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றிய போது தனியார்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். ஆந்திர மாநில உயர்நீதி

மன்றம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கே அந்த வழித்தடம் உரியது என்று தீர்ப்பளித்துவிட்டது. அதன்படி இடையில் நிறுத்தப்பட்டிருந்த போக்குவரத்துகள் மீண்டும் திருவண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் செல்வதாகத்தான் செய்தி இருக்கிறது. திருவண்ணாமலையிலிருந்து அப்படிப் போகவில்லை என்பதுதான் அவருடைய குற்றச்சாட்டு. அப்படியிருந்தால் அதை நிவர்த்திக்க பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பொதுவாக வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்து திருப்பதிக்கு அதிகமான மக்கள் செல்கிறார்கள். காட்பாடி ரெயில்வே ஸ்டேஷனில் அதற்காக அரைமணி நேரம், ஒரு மணி நேரம் ஆயிரக் கணக்கான மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ரெயிலில் இடம் கிடைப்பதில்லை. எனவே இந்தக் குறையை போக்க ஆரணி, வேலூர், போளூர், திருவண்ணாமலையில் இருந்து கூடுதல் பேருந்துகள் விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதுபற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : திருப்பதி ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. அதே போன்று மற்றொரு முக்கியமான இடமாக இருப்பது கன்னியாகுமரி. எனவே கன்னியாகுமரியில் இருந்து திருப்பதிக்கு நேரடியாகப் பஸ் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : திருவண்ணாமலைக்கும் கன்னியாகுமரிக்கும் எப்படி சம்பந்தம் என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்தக் கருத்தை மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

காஞ்சிபுரம்-திருச்சி விரைவுப் பேருந்துப் பணி.

*வினா எண் 503—**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்திலிருந்து திருச்சி சென்று கொண்டு இருந்த விரைவு வண்டி ஏன் நிறுத்தப்பட்டது ?

(ஆ) மீண்டும் விரைவு வண்டி விடுவதற்கான மக்களின் கோரிக்கைமீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. முத்துசாமி : (அ) இத்தடத்தின் வருவாய் செலவிற்குக் கூட கட்டுமானதாக இல்லாததால் இத்தடத்தில் பேருந்துகளின் இயக்கம் 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS